சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து – ஒருங்கிணைந்த

# கடலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவ பேச்சைக் கண்டித்து ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில், கடலூர், மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ, தலைமையிலும், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. கடலூர் கிழக்கு மற்றும் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வட்டம், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநரக, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

நாளை 12ஆம் தேதி

# சிவகங்கையில் முதல்வர் விஜய்யைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் வேண்டுகோள்!

சிவகங்கை, செப். 11-

தமிழக முதல்வர் விஜய் சட்டமன்றத்தில் மிசா குறித்து தவறாக பேசியதை கண்டித்து மாவட்ட தலை நகரங்களில் நாளை (12ம்தேதி) கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகிறது.

இதில் சிவகங்கை மாவட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் சிவகங்கை அரண்மனை வாயில் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.



இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் ,ஒன்றிய, நகர, பேரூர் ,கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் . கழக தலைமையினால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழகத்தை ஆள தகுதியற்ற முதல்வர் விஜய் தவறான முறையில்மிசா குறித்தும்,

கழகத் தலைவர் தளபதி அவர்கள் குறித்து சட்டமன்றத்தில் பேசியதை கண்டித்து நடைபெற உள்ள இந்த கண்டண ஆர்ப்பாட்டத்தில் அதிக அளவில் கழக நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட கழக செயலாளர் அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

நெல்லை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.சார்பில்

# முதல்வர் ஜோசப் விஜயை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## நெல்லை மாவட்டப் பொறுப்பாளர்கள் இரா.ஆவுடையப்பன் —மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.— ம.கிரகாம்பெல் கூட்டறிக்கை!

நெல்லை, செப்.11-

ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்ட தி.மு.க சார்பில் முதலமைச்சர் ஜோசப் விஜயை கண்டித்து திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (12.09.2026) காலை 10.00 மணி அளவில் நடைபெறுகிறது.என நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.







அதில் அவர்கள் கூறியிருப்பதாவது.

கழகத்தலைவர் அன்புத் தளபதியார் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி,

சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஜோசப் விஜயின் ஆணவ பேச்சை கண்டித்தும் சட்டமன்ற நடவடிக்கையை கேலி கூத்தாக்கிடும் போக்கை கண்டித்தும்,

திருநெல்வேலி மாவட்ட தி.மு.க சார்பில், நாளை (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதில் மாவட்ட தி.மு.க நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் மாநகர, பகுதி,ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனை வரும் திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கமிட கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூட்டறிக்கையில் கூறியுள்ளனர்.

---

இன்று தியாகி இமானுவேல் சேகரனாரின் 69ஆம் ஆண்டு நினைவு தினத்தின்போது

# மரியாதை செலுத்தவரும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## இராமநாதபுரம் மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!



பரமக்குடி செப்.11-

தியாகி இமானுவேல் சேகரனாரின் 69 ஆம் ஆண்டு நினைவு தினத்தின் போது மரியாதை செலுத்த வருகை தரும் திமுக இளைஞரணி செயலாளரும், எதிர்க் கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் வருகையை முன்னிட்டு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என பரமக்குடியில் நடைபெற்ற திமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் அவைத்தலைவரும் முன்னாள் அமைச்சருமான சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில், மாவட்ட கழக செயலாளர் காதாபாட்ஷா முத்து ராமலிங்கம் எல்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் கே.கே.கதிரவன் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில் திமுக நிர்வாக கட்டமைப்புக்காக மறு சீரமைப்பு குறித்து தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மகளிர் அணி செயலாளரும் முன்னாள் எம்.பி., ஜெ.ஹெலன் டேவிட்சன்,தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் கலந்துகொண்டு நிர்வாக கட்டமைப்பு மேற்கொள்ளுவது குறித்து கருத்தக்களை தெரிவித்தனர். மேலும் அதற்குரிய படிவங்களை வழங்கினார்.

பரமக்குடியில் செப்.11 ஆம் தேதி பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனாரின் 69 ஆம் ஆண்டு நினைவு தினத்தின் போது மரியாதை செலுத்த வருகை தரும் திமுக இளைஞரணி செயலாளரும்,எதிர் கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் வருகையை முன்னிட்டு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும், மறுசீரமைப்பை விரைந்து மேற்கொள் வேண்டும் உள்ளிட்ட 9 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில், முன்னாள் அமைச்சரும் முதுகுளத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்,முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா,மாநில இளைஞரணி துணைச்செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, முன்னாள் எம்.பி., பவானிராஜேந்திரன்,முன்னாள் எம்.எல்.ஏ., ராம்பிரபு, மற்றும் மாநில நிர்வாகிகள் சுப. திவாகரன், சுப.த.சம்பத்,குணசேகரன், ராமர், பாஸ்கரன்,அகமது தம்பி, விஜயகதிரவன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர்,பேரூர் கழக நிர்வாகிகள் 500 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

---

முதல்வர் விஜயைக் கண்டித்து நாளை

# மதுரையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் பி. மூர்த்தி – கோ.தளபதி – மு. மணிமாறன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, செப்.11-

தி.மு.க. தலைமை கழக அறிவிப்பின்படி சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜயின் ஆணவ பேச்சை கண்டித்து மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் புதூரில் நாளை (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி, சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.







அதன் விபரம் வருமாறு:-

தி.மு.க தலைமைக் கழகத்தின் அறிவிப்பின்படி "சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜயின் ஆணவப் பேச்சைக் கண்டித்து" மதுரை மாவட்ட திமுக சார்பில் நாளை (12.09.2026 - சனிக்கிழமை) காலை 10 மணிக்கு புதூர் பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரை வடக்கு, மதுரை மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதிக்கழக, பேரூர் கழக, வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், உடன்பிறப்புகள், கழக முன்னோடிகள் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - வழக்கறிஞர் ரெ.மகேஷ் அறிக்கை!

கன்னியாகுமரி, செப்.11-

திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஐந்து முறை தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரையும், இந்தியாவின் புகழை தோகா மாநாட்டில் நிலை நாட்டிய பொருளாதார மேதை முரசொலி மாறன் அவர்களையும், திருமணமான ஐந்தே மாதத்தில், 23 வயதில் MISA (Maintenance of Internal Security Act) அவசரநிலைச் சட்டத்தில் கைதாக்கப்பட்டு சிறைச்சாலை சித்திரவதைகளை அனுபவித்து, ஓராண்டு காலம் சிறையில் இருந்த தியாகத்தைச் செய்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் பேசிய பேச்சு கடுமையான கண்டனத்துக் குரியது. அவரது உரை மூலமாக சட்டமன்றத்தின் மாண்பு - மரபு வரலாறு இவை அனைத்தும் காற்றில் பறக்கிறது. சில அமைச்சர்கள் 'மீம்ஸ்', 'ரீல்ஸ்' மோகத்தினால் சட்டமன்றத்தில் தவறாகவே பேசி சட்டமன்ற மாண்பை கெடுக்கின்றனர்.



தி.மு.க. தலைமைக் கழகம் அறிவிப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (12.09.2026, சனிக் கிழமை) காலை 10.00 மணியளவில் நாகர்கோவில், அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் எனது தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆகவே, இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத் திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்திட கேட்டுக் கொள்கிறேன்.

---

முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# தென்காசியில் தி.மு.க.சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. கூட்டறிக்கை!

தென்காசி, செப்.11-

தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் அவர்கள் பேசிய கண்டனத்திற்குரிய பேச்சைக் கண்டித்து, தலைமைக் கழக அறிவிப்பின்படி, தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா ஆகியோர் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.





அந்த அறிக்கையில் அவர்கள் கூறியிருப்பதாவது. கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் அவர்கள் பேசிய கண்டனத்திற்குரிய கருத்துகளைக் கண்டித்து,தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்படி இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

நாளை 12.09.2026 சனிக் கிழமை காலை 10.30 மணியளவில்,தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு நடைபெறுகிறது.


இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர,பேரூர்,

வட்ட கிளைக் கழக நிர்வாகிகள்,அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிணைந்து கண்டனத்தைப் பதிவு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளார்கள்.

---

# இடைத்தேர்தல்



**மயக்கத்தில்**
**இழைத்த மாபாதகத்திற்கு**
**பிராயச்சித்தம் தேடிடவும்**

**ஆளத்தெரியாத மக்குகளின்**
**தலையில்**
**ஓங்கிக்**
**குட்டு வைத்து திருத்திடவும்**

**வலிய வந்து கிடைத்திருக்கும்**
**தாராள வாய்ப்பாக தாராபுரத்தையும்**

**மகத்தான சந்தர்ப்பமாக மதுராந்தகத்தையும்**
**மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.**

**வாக்களிப்பீர்**
**உதயசூரியன்...**

**என்னநாஞ் சொல்றது**



**மருது. அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு
துணைத் தலைவர்